பெயர்:-..... (புள்ளி = ...)

அருள் மற்ஸ் அக்கடமி

இல.41,இராஜேந்திரா வீதி, (டேவிட் வீதி லேன்), யாழ்ப்பாணம்.

முதலாம் தவணைப் பரீட்சை

தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் - 08 1.30 மணித்தியாலம்

பகுதி – I

(அ) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) நாட்டிற்கு விடுதலை கிடைக்குமா என்ற ஐயப்பாடு அவர் உள்ளத்தில் எழுந்தது. இங்கு ஐயம் என்பதன் ஒத்த சொல்

1. பயம் 2. கவலை 3. சந்தேகம் 4. ஆதங்கம்

2) ''அறிவினை தேடுவதில் கொண்டளவு வேட்கை'' இதில் வேட்கை என்பதன் ஒத்த பொருள்

1. வேடிக்கை 2. அவா 3. மருட்கை 4. வியப்பு

3) ''சோலை தோறும் சென்று தோழிமரைக் கூடுவேன்'' இங்கு தோழி என்பதன் எதிர்ப்பாற் சொல்

1. பாங்கன் 2. சிநேகிதன் 3. சிநேகிதி 4. தோழன்

4) படைவீரர்கள் சேனையில் சேர்ந்து கொண்டனர். இதில் வீரன் என்பதன் எதிர்ச் சொல்

1. கோழை 2. விவேகி 3. வீரச்சி 4. வீராங்கணை

5) உயிர்மெய் எழுத்துக்களும், ஆய்த எழுத்தும் பின்வருவனவற்றில் எதில் அடங்கும்

1. முதலெழுத்துக்கள் 2. சார்பெழுத்துக்கள்
3. நெட்டெழுத்துக்கள் 4. குற்றெழுத்துக்கள்

6) ''இனிமை'' என்பது எவ்வகைப் பெயர்

1. தொழிற்பெயர் 2. சினைப்பெயர் 3. பண்புப்பெயர் 4. பொருட்பெயர்

7) கழுத்தில் இருந்து பிறக்கும் எழுத்துக்கள்

1. ய், ர், ல், வ், ழ், ள் 2. வ், ஞ், ட், ம், த், ய்
3. க், ச், ட், த், ப், ற் 4. ங், ஞ், ண், ந், ம், ன்

8) இளங்கோவில் கம்பர் சிறந்தவன் இங்கு இடம் பெற்ற வேற்றுமை

1. 3ம் வேற்றுமை 2. 4ம் வேற்றுமை
3. 5ம் வேற்றுமை 4. 6ம் வேற்றுமை

9) இறந்தகால இடைநிலைகளாக அமைவது

1. த், ப் 2. த், ற் 3. கின்று, கிறு 4. இன், வ்

10) **Telescope** என்ற கலைச்சொல்லின் தமிழ் வடிவம்

1. தொலைகாட்டி 2. ஒலிவாங்கி 3. நுணுக்குக்காட்டி 4. திசையறிகருவி

11) இடுகுறிப்பெயராக அமைவது

1. பறவை 2. மண்வெட்டி 3. கடல் 4. முள்ளி

12) பாடசாலை – ஆசிரியர் போல பல்கலைக்கழகம்

1. பேராசிரியர் 2. வேந்தர் 3. துணைவேந்தர் 4. விரிவுரையாளர்

zoom Online
வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- நுண்ணறிவு
- கணிதம்
- பேச்சு சிங்களம்
- சுற்றாடல்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

13) பின்வருவனவற்றுள் பொருள் வேறுபாடு கொண்ட சொல்

1. கொடை 2. வண்மை 3. ஈகை 4. மறம்

14) பனை, பணை எனும் சொற்களின் பொருள்கள் முறையே

1. தாழம், பெருமை 2. பருத்தி, தானியம் 3. தாலம், மூங்கில் 4. சொல், பருத்தி

15) பயனற்றது என்னும் பொருள் தரும் உவமைத்தொடர்

1. செவிடன் காதில் ஊதிய சங்கு போல 2. தலையிருக்க வால் ஆடுவது போல
3. குன்றிலிட்ட தீபம் போல 4. ஒளியைக் கண்ட இருள் போல

16) கட்டுரை எழுதப்படும் போது தவிர்க்கப்பட வேண்டிய விடயம்

1. ஒரு தலைமை வாக்கியம் அமைய வேண்டும்.
2. இரண்டு பந்திகளிடையில் வரிகளை விட்டு எழுதுதல்
3. கூறிய விடயத்தை மீண்டும் மீண்டும் கூறுவதை தவிர்த்தல்
4. உதாரணங்கள், பழமொழிகள், மூலமாக விரித்து விளக்குதல்

17) காளிதாசன் சாகுந்தலம் நாடகத்தை படைத்தார். இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமைப் பொருள்

1. கொடை 2. கருத்தா 3. ஆக்கல் 4. தகுதி

18) "கான்ஆள நிலமகளைக் கைவிட்டு" எனும் பாடலின் ஆசிரியர்

1. ஞானசம்பந்தன் 2. விபுலானந்தர் 3. சச்சிதானந்தன் 4. கம்பர்

19) ஒற்றுமையின் பலத்தைக் குறிக்கும் பழமொழி

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
2. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது
3. மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப்பாயாது
4. இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை

20) பின்வருவனவற்றுள் பிழைகள் அற்ற வாக்கியத்தை தெரிக.

1. சுமதி காச்சல் மாறினதும் வெந்நீரில் குளித்தாள்
2. சுமதி காய்ச்சல் மாறியதும் வெந்நீரில் குளித்தாள்
3. சுமதி காய்ச்சல் மாறியதும் வென்னீரில் குளித்தாள்
4. சுமதி காச்சல் மாறியதும் வென்னீரில் குளித்தாள்

(30 புள்ளிகள்)

பகுதி II

(ஆ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாது கட்டுரை வரைக.

1. வாசிப்பின் முக்கியத்துவம்
2. கூண்டிற்கிளி தன்கதை கூறல்
3. நான் படித்து சுவைத்த நூல் இராமாயணம்
4. மலைநாட்டின் இயற்கை எழில்

(18 புள்ளிகள்)

02. கட்டாக்காலி (தன்னிச்சையாகத் திரியும்) நாய்களை கட்டுப்படுத்தக் கோரி உங்கள் பிரதேசசபைத் தலைவருக்கு 75 சொற்களில் அமையுமாறு கடிதம் ஒன்று எழுதுக. (12 புள்ளிகள்)

www.lkedu.lk

03. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. மக்களின் கண்ணமைப்புக்கும் பறவைகளின் கண்ணமைப்புக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் எவை?
2. பவளத்தின் செயற்பாடுகளாக ஆசிரியர் குறிப்பிடுவது
3. இராபார்ட் புரூஸ் ஏன் மறைந்து திரிந்தார். எங்கெங்கு மறைந்திருந்தார்?
4. சத்துருக்கன் முகத்திலே தோன்றிய எட்டுசுவைகளும் எவை?
5. வியாபாரியின் குணப்பண்புகள் எவை?
6. புத்தகம் வாசிப்பதனை கடமையாக்கினால் எவ்வாறான எண்ணங்கள் தோன்றும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?
7. நான்காம் வேற்றுமை பொருள்கள் எவை?

(20 பள்ளிகள்)

04. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (x) எனவும் அடையாளமிடுக.

1. இராமாயணத்தை வடமொழியில் எழுதியவர் வால்மீகி ( )
2. சேக்ஸ்பியர் ஓர் ஆங்கில நாடக ஆசிரியர் ( )
3. அவன் செல்வன் என்பது குறிப்பு வினை ( )
4. கட்டுரையாசிரியர் தனது கருத்தை முன்வைக்கும் பகுதியாக தொடருரை அமையும் ( )
5. கழுகு இருட்டிலும் மனிதனின் பார்வையிலும் பத்து மடங்கு பார்வையாற்றல் உடையது ( )

(10 புள்ளிகள்)

05. பின்வரும் சொற்களுக்கு பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1. தெரியல் 2. நறை 3. ஐசுவரியம் 4. சேனை 5. கன்னல்

(10 புள்ளிகள்)

www.lkedu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu